**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | |
|---|---|
| Case No. | : CC No. 615/2023 |
| Deposition of witness for Prosecution | : P.W– 4 |
| Name | : சத்தியபாமா, வயது 50 |
| Father Name/Husband Name | : ரெங்கசாமி |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of July 2026.

**(Accused absent. 317 CrPC petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். சிறப்பு உதவி ஆய்வாளர் சித்ரா மற்றும் ஆய்வாளர் கமலாதேவி அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.07.2023 ஆம் தேதி 20.00 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது இந்நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட புகார்மனுவைப் பார்வையிட்டு அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.8/2023 இ.த.ச பிரிவுகள் 498A, 294(b), 506(2) and 4 of DP Act ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த புகார்மனு அ.சா.ஆ.2 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை மேற்படி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை மேற்படி ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 24.07.2023 ஆம்

தேதி 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாடசாமி என்ற சங்கிலிபாண்டி மற்றும் ஞானையா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3 பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். எதிரிகள் மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை. பின்பு 14.07.2023 அன்று வழக்கின் சட்டபிரிவுகளை இ.த.ச பிரிவுகள் 498A ஆக சட்டபிரிவு மாற்று அறிக்கை மூலம் பிரிவு மாற்றம் செய்துள்ளார்.

4 **(அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், 16.04.2023 ஆம் தேதியிட்ட அ.சா.1 கொடுத்த புகார்மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்து ஆவணங்களின் உண்மை நகல் அ.சா.ஆ.7 ஆகவும், 04.06.2023 ஆம் தேதியிட்ட அ.சா.1 கொடுத்த புகார்மனுவின் விசாரணை முடிவு அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்து ஆவணங்களின் உண்மை நகல் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் விசாரணையை முடித்து 17.08.2023 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

4. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் புகார்தாரர் புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

6.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.